[24th January 1972

(3) PANEL OF VICE-CHAIRMEN.

MR. CHAIRMAN : I have to announce to the House that under rule 14 of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members of the Legislative Council to be the Panel of Vice-Chairmen for the Forty-first Session of the Legislative Council under the Constitution :

1. Thiru R. Dharmalingam.
2. Thirumathi S. Manjubhashini.
3. Thiru S. Jayarama Reddiar.
4. Thiru T. K. Shanmugam.

IV. Statement by the Hon. Minister for Food and Revenue correcting the answer to a Supplementary question on Starred Question No. 160.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அவசரம் காரணமாக மதிப்புக் குறைவாக எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணங்களை முதலில் பதிவு செய்து கொண்டு, வருவாய்க் கோட்ட அதிகாரி விசாரணை செய்யும் போது, பற்றுக்குறையாகவுள்ள முத்திரைத்தாள் தீர்வை வசூலிக்கப்படுமா என்று 21—7—1971 நாளிட்ட 160-ஆம் எண் வினவிற்குத் துணை வினா ஒன்றை திரு. டி. சுப்பையா, எம்.எல்.சி. அவர்கள் விடுத்தார். சட்டத்தில் அதற்கு விதித்துறை ஏதுமில்லையென்று மேலவைக்கு நான் தெரிவித்தேன்.

ஒப்படைப் பத்திரம், பரிமாற்ற பத்திரம் அல்லது நன்கொடைப் பத்திரம் ஒன்றைப் பதிவு செய்யும்போது, ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள சொத்தின் மதிப்பு அங்காடி மதிப்பிற்கு உண்மையானதல்ல என்று பதிவு அதிகாரி நம்புவதற்குக் காரணமிருந்தால், அவர் அத்தகைய ஆவணத்தை அங்காடி மதிப்பை நிர்ணயிப்பதற்கும் சரியான முத்திரைத் தாள் தீர்வை வசூலிப்பதற்கும் "மாவட்ட ஆட்சித் தலைவருக்கு" (வருவாய் கோட்ட அதிகாரி) அனுப்ப 1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) சட்டத்தின் 47-ஏ பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது என்பதுதான் இது குறித்து சரியான நிலையாகும். எனவே, ஓர் ஆவணத்தைப் பதிவு செய்வதற்கும், துண்டு விழும் முத்திரைத்தாள் தீர்வையை வசூலிப்பதற்கும் விதித்துறை உள்ளது. எனவே 47-ஏ பிரிவின்கீழ் ஓர் ஆவணம் பதிவு செய்யப் பெறுவதற்கு குறிப்பிட்ட ஒரு நபர் அவசரப்பட்டாலும், அவசரப்படாவிட்டாலும், அந்தச் சொத்து குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளதென்று துணைப் பதிவாளர் கருதினால் அந்த ஆவணம் "மாவட்ட ஆட்சித் தலைவருடைய" (வருவாய் கோட்ட அதிகாரி) கருத்தை அறிவதற்காக அனுப்பபடவேண்டும். சரியான முத்திரைத் தாள் தீர்வை மதிப்பிடப்பட்டு வசூலிக்கப்படும்வரை அந்த ஆவணம் அரசின் துறைகளிடம் இருக்கவேண்டும். அந்த ஆவணம் சம்பந்தப்பட்ட நபருக்கு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது அமைச்சரவர்கள் தந்த திருத்தம் சம்பந்தப்பட்ட இந்த அரசாங்க உத்திரவு நமது ஹைகோர்ட்டில் ஏதோ செல்லாது என தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், இம்மாதிரி பதியும் பத்திரங்களில் நிலத்தை ஏற்கெனவே என்ன விலைக்கு வாங்குகிறார்களோ அந்த விலைக்குத் தான் ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமேயொழிய, உத்தேசமாக இன்ன மதிப்பு இருக்கும் என்று ஸ்டாம்பு ஒட்ட வேண்டுமென்று சொல்லி வசூலிப்பது சரியல்ல என்று தீர்ப்பு வந்திருப்பதாகப் பத்திரிகைகளில்